# நடைபாதையில் வியாபாரம்

# பொருட்கள் பறிமுதல்



கோலாலம்பூர்,டிச.23-

தலைநகர் சுற்றுப்பகுதியில் பொதுமக்கள் நடைபாதையில் விற்பனைக்காக வைக்கப்பட்ட பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஜாலான் துன் சம்பந்தன், ஜாலான் தம்பி பிள்ளை, ஜாலான் சுல்தான் அப்துல் சமாட், ஜாலான் துங்கு அப்துல் ரஹ்மான், ஜாலான் சுல்தான் அஸ்லான் ஷா, (செளகிட் மோனோ ரயில்) ஆகிய பகுதிகளில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கத்துறை அதிகாரிகளும் புக்கிட் பிந்தாங் அலுவலகக் கிளைப் பணியாளர்களும் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

9 இடங்களில் நடைபாதையில் வியாபாரம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொது மக்களின் நடைபாதையில் வைக்கப் பட்டிருந்த நாற்காலிகள், பிளாஸ்டிக் மேஜைகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங், ஜாலான் மிஹார்ஜா, செராஸிலுள்ள டிபிகேஎல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாக அந்த அறிக்கை குறிப்பிட்டது.

பொதுமக்கள் அளித்த புகாரை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. வியாபாரிகளும் அங்காடிக் கடைக்காரர்களும் நிர்ணயிக்கப்பட்ட சட்டவிதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். விதிமுறைகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.